*World Christian Fellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# *ஆவிக்குரிய யுத்தம் - பகுதி 03*

*2 கொரிந்தியர் 10:1-6, உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்;கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 2. எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக்குறித்து நான் கண்டிப்பாயிருக்கவேண்டுமென்று நினைத்திருக்கிற தைரியத்தோடே, உங்கள் முன்பாக இருக்கும்போது, நான் கண்டிப்புள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். 3. நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. 4. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 5. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். 6. உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயுமிருக்கிறோம்.*

*1. இரக்கம்*

*ஒரு திறமையான போர்ச்சேவகன் இரக்கமுள்ளவன்.*

*அவன் மற்றவர்கள் மீது இரக்கப்படுவான்.*

*நல்ல போர்ச்சேவகர்கள் அவசியப்படும்போது மட்டுமே தங்களுடைய கொடிய சக்தியை பயன்படுத்துவர்!*

*2. தைரியம்*

*பவுல் இரக்கமுள்ளவர் மட்டுமன்று; அவர் தைரியமானவர்.*

*3. திறமையானவர்*

*திறமையற்றவராய் இருந்தால், இரக்கமும் தைரியமும் பிரயோஜனமற்றவைகளாகிவிடும்.*

*தகுதி.*

*சமாதானமாவதற்கு எந்த எல்லைக்கும் பயணிக்கலாம், ஆனால் அது நேர்த்தியாய் முடியாது. ஆகையால் நீங்கள் யுத்தத்தில் பங்கேற்க வேண்டும்.*

*களத்தில் இறங்குவதற்கு நீங்கள் மிகுந்த தைரியமுள்ளவர்களாயிருக்கலாம். ஆனால் நீங்கள் திறமையற்றவர்களாயிருந்தால், உங்கள் தைரியம் ஒன்றுக்கும் உதவாது.*

*உனக்கு ஆயதங்கள் தேவை.*

*உனக்கு தகுதியும் திறமையும் தேவை.*

*திறமையில்லை என்றால், தைரியம் வீணாகிவிடும்.*

*நம்பிக்கையில்லை என்றால், தைரியம் வீணாகிவிடும்.*

*மிகுந்த தைரியசாலிகளான முட்டாள்கள் எந்த விதமான ஆயுதங்களும் இல்லாமல் தைரியத்தை மட்டும் வைத்துக்கொண்டு யுத்தத்திற்கு போனால் அவர்கள் மரணத்தை தழுவ நேரிடும். அவர்கள் எதிரிகளின் ஆயதங்கள் அவர்களை மேற்கொள்ளும்.*

*தன்னிடத்தில் இரக்கம், தைரியம் மட்டுமல்லாது, தான் முறையாய் தகுதிப்படுத்தப்பட்டுள்ளேன் என்று இந்த கலகக்காரர்களை பவுல் எச்சரிக்கிறார்.*

*மாம்சத்தில் நடப்பது என்பது உள்ளுக்குள் கறைபடிந்திருப்பது, உள்ளுக்குள் துன்மார்க்க சிந்தை, இச்சை, பொருளாசை, மற்றும் பெருமையினால் நிறைந்திருப்பது.*

***வச. 3, நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.***

*அவர்கள் குற்றஞ்சாட்டுவதுபோல பவுல் ஒழுக்கரீதியாய் மாம்சத்தில் நடக்கவில்லை. அவர் சரீரப்பிரகாரமாகவே மாம்சத்தில் நடந்தார்.*

*நான் ஒரு மனிதன் என்று அவர் தெளிவாய் சொல்லுகிறார்.*

*அவர் கறைபடிந்தவர் என்று அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுதலித்தார். ஆனால், அவர் மாம்சத்திற்கு உட்பட்ட மனிதன் தான் என்பதை அவர் ஒத்துக்கொள்கிறார். ஒரு சராசரி மனிதன் எப்படி மாம்சத்தில் நடக்கிறானோ, அந்த விதத்தில் தானும் மாம்சத்தில் நடக்கிறேன் என்று அவர் ஒத்துக்கொள்கிறார்.*

***2 கொரிந்தியர் 1:12, <u>மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால்</u> நாங்கள் உலகத்திலேயும் விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது.***

***2 கொரிந்தியர் 4:2, <u>வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து</u>, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்.***

*கலாத்தியர் 5:16,* **பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.**

**கலாத்தியர்** *5:25,* **நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.**

*ஆகையால் பவுல் ஒழுக்க ரீதியாய் மாம்சத்தில் நடக்கவில்லை. ஆனால் அவரும் மாம்சபிரகாரமான மனிதன் தான்.*

*பவுலின் வார்த்தைகள்,*

- *நான் அப்போஸ்தலன்,*
- *நான் அப்போஸ்தல அதிகாரத்தை உடையவன்,*
- *நான் இயற்கைக்கு அப்பாற்பட்ட மனிதப் பிறவி அல்ல,*
- *என்னுடைய அழியக்கூடிய சரீரத்தோடு தான் நான் ஊழியம் செய்கிறேன்.*
- *நான் மாம்சத்தில் வாழ்பவன் என்றாலும் மாம்சத்தால் கட்டுப்படுத்தப்படவில்லை.*

*அவர் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர் என்பதினால் அவர் ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசய பிறவி அல்ல, எந்த மனிதனைக் காட்டிலும் மேன்மையானவர் அல்ல. அவரும் எல்லோரைப் போன்றும் சாதாரண மனிதன் தான்.*

*2 கொரிந்தியர் 4:7,* **இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை** ***மண்பாண்டங்களில்*** *பெற்றிருக்கிறோம்.*

*2 கொரிந்தியர் 5:1,* **பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு** *அழிந்துபோனாலும்,* **தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.**

*2 கொரிந்தியர் 4:16,* **ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது** *அழிந்தும்,* **உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**

*மண்பாண்டம்.*

*கூடாரம்,*

*ஒவ்வொரு நாளும் அழிந்துகொண்டிருக்கிறது.*

*அவர் உள்ளுக்குள் துன்மார்க்கத்தினால் நடத்தப்படவில்லை என்றாலும், அவரும் ஒரு மனிதன்.*

*பவுலின் வாழ்க்கையும் ஊழியமும் ஓர் யுத்தம். நமக்கும் அது ஒரு யுத்தமே.*

*மாம்ச போராயுதங்களைக் கொண்டு அதை நாம் செய்யவேண்டியதில்லை. நாம் மாம்சமானவர்கள் என்றாலும், மாம்ச ஆயுதங்களைக் கொண்டு யுத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை.*

*அது எப்போதுமே ஒரு யுத்தம். அந்த யுத்தத்தில் நாம் பங்குபெறுகிறோம்.*

*இருளின் ராஜ்ஜியமே நம்முடைய எதிரி.*

- *நாம் சத்தியத்திற்காய் போராடுகிறோம்.*
- *சத்தியத்தை பாதுகாப்பதற்காகவும் அதை பிரசித்தப்படுத்துவதற்காகவும் போராடுகிறோம்.*
- *இயேசு கிறிஸ்துவின் நாம் மகிமைக்காய் நாம் யுத்தம் செய்கிறோம்.*
- *பாவிகளின் இரட்சிப்பிற்காய் நாம் போராடுகிறோம்.*
- *பரிசுத்தவான்களாய் மாறுவதற்குப் போராடுகிறோம்.*
- *நாம் யுத்தம் செய்கிறோம்.*

*2 **கொரிந்தியர்** 6:7, **சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயதங்களைத் தரித்திருக்கிறதிலும்,***

***எபேசியர் 6ஆம் அதிகாரத்தில்** சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யுத்தம் செய்யாமல், துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போரடுவதற்கு பவுல் அறிவுறுத்துகிறார்.*

*நல்ல போராட்டத்தைப் போராடுவதின் அவசியத்தைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனைக் கூறுகிறார்.*

*1 **தீமோத்தேயு** 1:18, **குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம்பண்ணும்படி, இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு.***

*2 **தீமோத்தேயு** 2:3, **நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி.***

*2 **தீமோத்தேயு** 4:7, **நல்ல போராட்டத்தைப் போராடினேன்.***

*சத்தியத்தைப் பாதுகாக்கும்பொருட்டும், கிறிஸ்துவை கனப்படுத்தும் பொருட்டும், பாவிகளை இரட்சிக்கும்பொருட்டும், பரிசுத்தவான்களாய் மாறுவதற்கும் பவுல் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்.*

*மாம்ச போராயுதங்களை வைத்துக்கொண்டு அந்த யுத்தத்தை நாம் செய்ய முடியாது.*

***3ஆம் வசனத்தில்** பவுல் அதை தெளிவுபடுத்துகிறார்,*

*நாம் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.*

*நாம் மாம்ச போராயுதங்களை பயன்படுத்தப்போவதில்லை.*

*அவர் மனித புத்தியோடு போராடப்போவதில்லை. திறமையான யுக்திகளைக் கொண்டு போராடப்போவதில்லை. அவர் தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியோடு போராடப்போவதில்லை. இது வேறு நிலையில் நடைபெறகிற யுத்தம்.*

***வச. 4, எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.***

*எது இல்லையோ அது எதிர்மறை*

*அது இருந்தால் அது நேர்மறை*

- *மாம்ச போராயுதங்களுக்கு எந்த சக்தியும் இல்லை.*
- *மாம்ச போராயுதங்களைக் கொண்டு அந்தகார உலகத்தோடு யுத்தம் செய்ய முடியாது.*
- *மாம்ச போராயுதங்களைக் கொண்டு, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போராட முடியாது.*
- *மாம்ச போராயுதங்களைக் கொண்டு இருளின் ஆதிக்கதில் இருப்பவரை மீட்க முடியாது.*
- *மாம்ச போராயுதங்களைக் கொண்டு பாவிகளை மறுரூபப்படுத்த முடியாது.*
- *மாம்ச போராயுதங்கள், பரிசுத்தவான்களை பரிசுத்தமாக்காது.*

*மாம்ச போராயுதங்கள், ஆவிக்குரிய உலகத்தில் செயலற்றவைகள், இருளின் ஆதிக்கத்தில் செயலற்றவைகள், சத்துருவின் மீதும் செயலற்றவைகள், இயற்கைக்கு அப்பாற்பட்ட உலகத்தில் செயலற்றவைகள், மனிதர்களுடைய நித்திய ஆத்துமாவின் மீது செயலற்றவைகள்.*

***உலகத்தின் ஆயுதங்கள் என்னென்ன?***

***மாம்சத்தின் போராயுதங்கள் என்னென்ன?***

*மாம்ச காரணத் தேடல்,*

*மாம்ச ஞானம்,*

*மாம்ச திட்டம்,*

*பகுத்தறிவு,*

*யுக்திகள்,*

*நிறுவனம்,*

*மாம்ச திறமைகள்,*

*மாம்ச பேச்சுத் திறமை,*

*மாம்ச தந்திரங்கள்,*

*மாம்ச பொழுதுபோக்கு,*

*ஆன்மீகவாதியாய் காண்பித்துக்கொள்ளுதல்,*

*தத்துவ மற்றும் உளவியல் ஆலோசனைகள்,*

*மார்க்கத்தில் ஆழ்ந்த நபர்கள்*

*மற்றும் பல.,*

*இதுபோன்ற யுக்திகளை நீங்கள் பயன்படுத்தி நல்ல பொருட்களை உற்பத்தி செய்யும்படிக்கு மக்களை ஊக்குவிக்கிறோம். இந்த யுக்திகளைப் பயன்படுத்தி மக்களை மகிழ்ச்சியாக்குவதற்கும், அவர் மற்ற நண்பர்களோடும் உறவினர்களோடும் சகஜமாய் பழகுவதற்கு பயன்படுத்துகிறோம். அவைகளெல்லாம் மாம்சீக காரியங்கள். அவைகளை நாம் பயன்படுத்தி, அவர்கள் மனோ ரீதியாய் பலப்பட்டு, தங்கள் வாழ்க்கை சூழ்நிலைகளோடு நேர்த்தியாய் பொருந்தி வாழும்படி செய்கிறோம்.*

*இந்த போராயுதங்கள் வலிமை வாய்ந்தவைகளாகவே தெரிகிறது. மெய்யான அக்கினியின் வல்லமையை பார்த்திராதவர்களுக்கு இந்த மாம்ச போராயுதங்கள் பெரிதாய் தெரிகிறது. இத்தகைய போராயுதங்கள் மேலோட்டமான தற்காலிக வெற்றிகளைத் தருகிறது. ஆனால் நாளடைவில் அவைகள் தீமைகளாய் திரும்பிவிடுகிறது.*

*பவுல் இவைகள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு, மெய்யான ஆவிக்குரிய ஆயுதங்களைத் தரித்துக்கொள்கிறார்.*

*நேர்மறையானவை:*

*இந்த போராயுதங்கள் தெய்வீக வல்லமை படைத்தது. நாம் மாம்ச போராயுதங்களை வைத்து யுத்தம் செய்ய வேண்டியதில்லை, இந்த தெய்வீக போராயுதங்களை பயன்படுத்திக்கொள்ளலாம்.*

*அவைகள் தேவனுடைய ஆயுதங்கள். பரலோகத்திலிருந்து அவைகளைப் பெறுகிறோம். தேவனுடைய களஞ்சியத்திலிருந்து அவைகளை தனிப்பட்ட விதத்தில் நாம் நேரடியாக இழுக்கிறோம்.*

***வச. 4, எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.***

*நாம் பலத்த அரண்களை சந்திக்கிறோம். கோட்டையின் அரண்கள் என்பது மிகவும் வலிமையான ஒரு உதாரணம்.*

*கொரிந்து பட்டணத்தில் அக்ரோபோலிஸ் என்னும் உயர்ந்த பட்டணம் இருக்கிறது. அந்த அக்ரோபோலிஸ் பட்டணத்திற்கு மேலே அரண்களோடு கூடிய அசைக்கமுடியாத கோட்டை இருக்கிறது. தேசம் ஒரு யுத்தத்தை சந்திக்கும்போது, அந்த இடத்தைச் சேர்ந்த மக்கள் தங்களை தற்காத்துக்கொள்ளுவதற்கு இந்த கோட்டையின் பின்பு ஒதுங்குவது வழக்கம். அவ்வாறு ஒதுங்கும்போது அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்கின்றனர்.*

*பண்டைய காலத்தில் பேரிடர் காலத்தில் மக்களை பாதுகாக்கும் நோக்கத்துடனும் பெரிய கோட்டைகளைக் கட்டினர். பெரும்பாலான பட்டணங்கள் தங்கள் நகரத்தைச் சுற்றிலும் உறுதியான கற்களினால் மதில் எழுப்புவர். இந்த கோட்டைகளில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அதின் வழியாய் எதிரியின் ஊடுருவலை கண்காணித்து, அவர்களின் ஆயுதங்களை செயலிழக்கச் செய்வர்.*

*இன்றும் வடக்கு அயர்லாந்தில் லண்டன் டெர்ரி என்ற இடத்திற்கு பயணம் செய்வீர்களென்றால், அங்கே இதுபோன்ற பல கோட்டைகளை நாம் பார்க்கமுடியும்.*

*நம்முடைய எதிரி வல்லமையுள்ளவன் என்றும் அவனை எதிர்க்க பயன்படுத்தும் ஆயுதங்களும் தெய்வீக வல்லமையுள்ளதாய் இருக்கவேண்டும் என்றும் பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார்.*

*பலத்த கோட்டை என்பது சிறை என்றும் அர்த்தங்கொள்ளும். அதுவும் ஆர்வமூட்டக்கூடிய ஒன்று.*

*இந்த பலத்த கோட்டைகளில் ஸ்தாபிக்கப்பட்டு, நிலைநிறுத்தப்பட்ட இந்த ஜனங்கள் சிறைகளிலும் அடைபட்டிருக்கின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பு என்று கருதிய அதே இடத்தில் அவர்கள் கைதிகளாகவும் ஆக்கப்பட்டனர். அந்த கோட்டையே அவர்களின் கல்லறையாய் மாறியது.*

*நம்முடைய இந்த பலத்த கோட்டைகளை மாம்ச ரீதியாகவோ உலகப்பிரகாரமாகவோ, நாம் தகர்க்கமுடியாது. ஏனென்றால் இந்த பலத்த கட்டுகளைத் தகர்க்கும் வல்லமையுள்ள போராயுதங்கள் பாவிகளிடத்தில் இல்லை.*

*நம்முடைய இலக்கு அதை தாக்குவது மட்டுமன்றி, அவற்றை முற்றிலுமாய் தகர்த்து அழிப்பதே நம்முடைய இலக்கு.*

***அந்த பலத்த கோட்டைகள் எவை?***

***அவர் எதின் மீது தாக்குதல் நடத்துகிறார்?***

***வச. 5,** அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.*

*எது கோட்டைகள்?*

*தேவனை அறிகிற அறிவிற்கு எதிராக எழும்புகிற விவாதங்களோ அல்லது எந்த உயர்ந்த காரியங்களும் கோட்டைகளே.*

*இந்த கோட்டைகளைத் தகர்த்து அழிப்பதற்கு நம்மிடத்தில் தெய்வீக வல்லமையுள்ள போராயுதங்கள் உள்ளது. தேவனுடைய அறிவிற்கு விரோதமாய் எழும்புகிற அனைத்து காரியங்களையும் நாம் தகர்க்கவேண்டியது நம்முடைய பொறுப்பு.*

*விவாதங்கள், சர்ச்சைகள் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்கப் பதம் ''லாஜிஸ்மோஸ்.'' அதற்கு சிந்தனைகள், கருத்துகள், எண்ணங்கள், காரணங்கள், தத்துவங்கள், கொள்கைகள், முற்கோள்கள், மற்றும் மதங்கள் என்று அர்த்தங்கள் உண்டு.*

*இந்த கோட்டைகளின் பின்பாகத் தான் மனிதன் மறைந்திருக்கிறான். முற்கோள் கோட்டை, தத்துவ கோட்டை, மார்க்க கோட்டை ஆகிய இவைகளுக்கு பின்பாக மனிதன் ஒளிந்துகொண்டு தேவனுக்கு விரோதமாகவும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதமாகவும் செயல்படுகிறார்கள்.*

*இந்த கோட்டைகள் எதுவும் சத்துரு அல்ல என்பதை நீங்கள் கவனித்தீர்களா?*

*அவைகள் சத்துரு அல்ல. ஆவிக்குரிய யுத்தம் என்றால் பிசாசை துரத்திக்கொண்டு ஓடுவது என்று நம்மில் பலர் நம்பியிருக்கின்றனர்.*

*ஆனால் வேதம் அவ்வாறு சித்தரிக்கவில்லை!*

*ஆவிக்குரிய யுத்தம் என்பது நாம் ஒரு குழுவாய் இணைந்து, அணிவகுத்து, சில பிசாசுகளைத் தேடி கண்டுபிடித்து, அவைகள் மீது அதிகாரத்தை செயல்படுத்தி, அவைகளை அங்கிருந்து விரட்டுவது என்று வேதம் ஒருபோதும் சொல்லவில்லை.*

*அவ்வாறு செய்யும்படிக்கு திருச்சபைக்கு அறிவுறுத்தப்படவில்லை!*

*நாம் பிசாசோடு நேருக்குநேராய் நின்றோ, ஆவியோடு ஆவியாகவோ, பேச்சுக்கு மறுபேச்சு பேசியோ யுத்தம்செய்ய போவதில்லை.*

*நம்முடைய எதிரி பிசாசின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட முற்கோள்களால் உருவாக்கப்பட்டுள்ளான். நாம் அந்த நம்பிக்கைகளை தகர்க்கவேண்டும்.*

*இவைகளே பிசாசின் உபதேசங்கள். இவைகள் வஞ்சிக்கிற ஆவியை உடைய மாய்மாலக்காரரும் பொய்யருமாகிய மனிதர்களின் சுய ஞானத்தினால் கட்டப்பட்ட பிசாசின் உபதேசங்கள்.*

*ஆனால் நாம் அந்த திட்டத்தை மட்டுமே தகர்க்கிறோம். நாம் பிசாசை துரத்திக்கொண்டு ஓடவில்லை. சாத்தானின் பலத்த கட்டுகளை உடைப்பதே நம்முடைய யுத்தம் என்பதை வேதம் மிகத் தெளிவாய் சொல்லுகிறது. அவைகள் சத்துருவினுடையவைகள் அல்ல, அவைகள் மாம்சத்திற்குட்பட்டவைகள், தேவனைத் தகர்க்கும் பிசாசின் தந்திரங்கள்.*

*எல்லா சிந்தனையும், எல்லா கருத்தும், எல்லா காரணமும், எல்லா தத்துவங்களும், எல்லா கொள்கைகளும், எல்லா முற்கோள்களும் தேவனுக்கு விரோதமாய் எழும்புகிறது.*

*அதுவே கோட்டை. அவைகள் இன்னும் பலமுள்ளவைகளாய் மாறிக்கொண்டு வருகிறது.*

***1 கொரிந்தியர் 3:19-20, இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், 20. ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது.***

*அவைகள் ஞானிகளின் பகுத்தறியும் உலக ஞானம். அவைகள் தேவனை அறியும் அறிவிற்கு விரோதமாக எழுப்பப்பட்டது.*

***ரோமர் 1ஆம் அதிகாரம்**, இந்த உலகத்திற்கு வருகிற அனைத்து மனிதர்களும் தேவனை அறிகிற அறிவோடே இந்த உலகத்திற்கு வருகின்றனர் என்றும், அவருடைய நித்திய வல்லமையை அறியக் கூடிய போதிய அறிவுடனே வருகின்றனர் என்றும், அவர்களை தேவனென்று அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாதிருக்கிறார்கள் என்றும் கூறுகிறது. அவர்கள் தேவனுக்கு விரோதமாக திரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று தெய்வங்களை ஏற்படுத்திக்கொண்டு, மெய்யான தேவனுக்கு விரோதமாக தவறான நம்பிக்கைகளில் தங்களை ஸ்தாபித்துக்கொண்டனர். தேவனுக்கு விரோதமாகவும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதமாகவும் எழும்பினர்.*

*வெளிப்பாட்டின் சத்தியத்தையும் மீட்பின் சத்தியத்தையும் அவர்கள் முழுவதுமாய் புறக்கணித்தனர். தேவனுக்கு விரோதமாய், கிறிஸ்துவுக்கு விரோதமாய், வேதத்துக்கு விரோதமாய் நரகத்திலிருந்து எடுத்த நம்பிக்கைகளை மனிதர்கள் உருவாக்கிக் கொண்டனர். அவைகள் அனைத்தும் தகர்க்கப்பட்டாகவேண்டும்.*

*இந்த பலத்த கோட்டைகளை பவுல் நன்கு அறிவார்.*

*எப்படி?*

*பவுலும் அவர்களில் ஒருவராகவே தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்.*

*தேவனுக்கு விரோதமாய் செயல்படுகிற இதுபோன்ற ஒரு கோட்டையில் தான் பவுலும் பிறந்து வளர்ந்திருக்கிறார்.*

*விசுவாச துரோக யூதமார்க்கம். தன்னுடைய சுய நீதியைக்கொண்டே இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை யூத மார்க்கம் தத்தெடுத்துக்கொண்டது. பவுல் துவக்கத்தில் இதை நம்பினார்.*

*பவுல், எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்பட்டு, ஒரு இஸ்ரவேலனாய் பென்யமீன் கோத்திரத்தின் அங்கத்தினராயிருந்து, எபிரெயருக்குள் எபிரெயனாய் வாழ்ந்து, யூத பாரம்பரியத்தை கைக்கொண்டு, நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, பழுதில்லாமல் வாழ்ந்தால் பரலோகத்தை சுதந்தரிக்கமுடியும் என்று உறுதியாய் நம்பி வளர்ந்தவர்.*

*அவருடைய இரட்சிப்பை அவரே சுதந்தரித்துக்கொண்டார் என்பதை அவர் நம்பினார்.*

***அப்போஸ்தலர் 26:9, முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன்.***

*பவுல் கிறிஸ்துவுக்கு விரோதமாகச் செயல்பட்டவர். அவர் தனக்கென்று ஒரு கோட்டையை ஸ்தாபித்துக்கொண்டார். அது தேவனை அறிகிற அறிவிற்கு விரோதமானது.*

*அவருக்கு அவருடைய பெருமையான மாம்ச முற்கோள் இருந்தது.*

*அந்த கோட்டைக்குள் அவர் அடைபட்டிருந்ததை அவர் கண்டுபிடித்தார். அதுவே அவருடைய சிறை என்பதை அறிந்துகொண்டார்.*

*அவர் பொய்யான வஞ்சிக்கிற அழிக்கக்கூடிய முற்கோள் என்னும் சிறையில் அடைபட்டிருந்தார்.*

*தமஸ்குக்கு போகிற பாதையில் அவருடைய கோட்டை தகர்க்கப்பட்டது. பவுல் கிறிஸ்துவுக்கு சிறையாக்கப்பட்டார். அவருடைய கோட்டை என்னும் நம்பிக்கை பொய்யானது என்பதை அவர் அறிந்த மாத்திரத்தில், அவைகள் தேவனுடைய வல்லமையினால் முற்றிலும் தகர்க்கப்பட்டது.*

*தேவனுக்கு விரோதமான மாம்ச கிரியைகளைத் தகர்த்தெறிவதே அனைத்து ஆவிக்குரிய யுத்தங்களுக்கும் பின் இருக்கும் காரணம். இதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.*

*அது மார்க்க ரீதியானதாய் இருக்கலாம். மோர்மோனிசம், யேகோவா சாட்சிகள், ரோமன் கத்தோலிக்கம், இந்து மார்க்கம், புத்த மார்க்கம், ஷின்டோ மார்க்கம், சோகா கக்கை என்று அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்.*

*மார்க்கம் சாராமல், இயற்கையானதாகவும் அவை இருக்கலாம். மிகத் திறமையான அறிவாளிகள், தத்துவ மேதைகள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், உலகத்திலுள்ள நீதிபதிகள் போன்றவர்கள் இயற்கைக்கு உட்பட்ட மாம்ச கட்டுகள்.*

*அவர்கள் நம்முடைய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகின்றனர்.*

*நம்முடைய பலகலைக்கழகங்களில், இயற்கைவாதம் முக்கியத்துவப்படுத்தப்பட்டு, உலகத்தில் தோன்றியிருக்கிறவைகளே நம்முடைய வாழ்க்கையின் அடிப்படை என்று போதிக்கப்படுகிறது.*

*தேவனையும், சுவிசேஷத்தையும், வேதாகமத்தையும் சந்தேகித்து கேள்வியெழுப்புபவர்கள் சுதந்திரத்திற்கு அபாயமானவர்கள். அவர்களை பொதுவான நடைமுறை வாழ்க்கையிலோ அல்லது பொதுவான கலாச்சாரத்திலோ குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டே அனுமதிக்கவேண்டும்.*

*பொது வாழ்க்கையில் தேவனுக்கு பங்கு இல்லை.*

*கல்வியில் தேவனுக்குப் பங்கு இல்லை.*

*அரசியலில், சமுதாய கொள்கைகளில், சட்ட விதிமுறைகளில், ஒழுக்கத்தை தீர்மானிப்பதில் தேவனுக்குப் பங்கு இல்லை.*

*தேவனை புறக்கணிக்கும் இந்த அறிவுப்பூர்வமான, விஞ்ஞான மார்க்கமான, சுதந்திரத்தை விரும்புகிற இந்த செயல்பாடுகள் மெய்யாகவே பாவத்தை நேசிக்கிற கிரியைகள்.*

*தற்போது நடைமுறையிலிருக்கும் பரிணாம நாத்திகம், இந்த முற்கோள் கோட்டைகளில் ஒன்று. பரிணாம வளர்ச்சி மனுஷீகத்தை பரிதாபத்திற்குரியதாய் மாற்றியுள்ளது.*

*இவைகள் அனைத்தும் பாவிகளின் பலத்த கோட்டைகள்.*

*அதில் சிலர் ஆன்மீகவாதிகள், சிலரை நாம் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்றும் சொல்லலாம்.*

*சிலர் இயற்கைக்கு அப்பாற்பட்டவர்கள்; சிலர் இயல்பானவர்கள்.*

*ஆனால் அவர்கள் முடிவில் மனித ஞானத்தினாலும் வல்லமையினாலும் தகர்க்கமுடியாத பலத்த கோட்டைகளாய் மாறிவிடுவர். இந்த சித்தாந்தங்கள் பிசாசின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. அவைகளை எளிதில் தகர்க்கமுடியாது.*

*நமக்கு வல்லமையுள்ள போராயுதங்கள் தேவை.*

***வச. 5, அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.***

*ஓர் அற்புதமான சித்திரம்.*

***அந்த ஆயுதங்கள் எவை?***

*நம்முடைய அனைத்து சிந்தனைகளையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துவதே அந்த ஆயுதம்.*

*சத்தியத்தைக் கொண்டே பிழையை திருத்துவதே ஒரே வழி.*

*தவறான நம்பிக்கைகளை தகர்ப்பதற்கு, அவைகளை நீக்கிவிட்டு, அதற்கு பதிலாக சத்தியத்தை நிரப்புவதே ஒரே வழியாகும்.*

***எபேசியர் 6**ஆம் அதிகாரத்தைப் பார்க்கும்போது, ஒரு கிறிஸ்தவ போர்ச்சேவகன் தன் யுத்த வஸ்திரத்தோடு இருப்பதை பார்க்கமுடியும். அவரிடத்தில் ஒரேயொரு ஆயுதம் மாத்திரமே உள்ளது.*

*அது தேவனுடைய வார்த்தை என்னும் பட்டயம்.*

*பிசாசின் தந்திரங்களையும் சூத்திரங்களையும் மென்மையாக சொல்லியோ அல்லது உரக்கச் சொல்லியோ இந்த ஆவிக்குரிய யுத்தத்தை நாம் செய்ய முடியாது. மந்திர தந்திரங்களை வைத்து இந்த ஆவிக்குரிய யுத்தத்தை நாம் செய்ய முடியாது.*

*நாம் மேற்கொள்ளுகிற இந்த ஆவிக்குரிய யுத்தம் நம்முடைய சித்தாந்தங்களை அடிப்படையாய் கொண்டது என்பதினால், அதை சிந்தையின் பூர்வமாய் மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற பலத்த கோட்டைகளின் பின்பு தங்களை*

*மறைத்துக்கொண்டிருக்கும் மக்களின் நம்பிக்கைகளை சத்தியத்தைக் கொண்டு நாம் தகர்க்கவேண்டும்.*

*இந்த முழு ஆவிக்குரிய யுத்தத்திலும் சத்துருவோடு போராடுவதில் நாம் ஆர்வம் காண்பிப்பது இன்று என்னை ஆச்சரியப்படுத்துகிறது.*

*எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் என்று இங்கு குறிப்பிடப்படுவது, நேரடியாய் ஈட்டியைக் கொண்டு சிறைப்படுத்துவது என்று அர்த்தமாகிறது.*

*அந்த கோட்டையைத் தகர்த்து தரைமட்டமாக்கி, சிறைப்படுத்த வேண்டியவர்களின் முதுகில் ஈட்டியை வைத்து, அவர்களை சிறைப்படுத்தி கூட்டிவருகிறோம். இது அழிக்கக்கூடிய பொய்களிலிருந்து ஆத்துமாவை பாதுகாப்பது குறித்த அழகான உருவகம்.*

*அவர்களை அணிவகுக்கச் செய்து, கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்துகிறோம்.*

*நம்முடைய ஆவிக்குரிய யுத்தம் சத்தியத்திற்காகவும் கிறிஸ்துவின் கனத்திற்காகவும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகவுமே நடைபெறுகிறது.*

*பவுல் மற்ற சுய நீதியில் வாழ்ந்த யூதர்களோடு சேர்ந்து பலத்த கோட்டையில் வாழ்ந்துகொண்டிருந்தார். அவருடைய கோட்டை முற்றிலுமாய் தகர்க்கப்பட்டு, அவர் கிறிஸ்துவுக்கு சிறையாக்கப்பட்டார். உடனே அவர் "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" என்று தன் வாயைத் திறந்து கேட்டார்.*

*பலத்த கோட்டை தகர்க்கப்பட்டு கிறிஸ்துவுக்கு சிறையாக்கப்படுவது என்றால் என்ன என்பது அவருக்கு நன்றாய் தெரியும்.*

*அவரும் தன்னை இயேசு கிறிஸ்துவின் அடிமை என்றே அழைத்துக்கொள்ளுகிறார்.*

***எபேசியர் 3:1, இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள்பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்.***

*ஆகையினால் தான் நாங்கள் கள்ள போதனையை அடையாளம் காட்டுகிறோம்.*

*ஏனென்றால் அவைகளெல்லாம் தேவனை அறிகிற அறிவிற்கு விரோதமான கோட்டைகளாய் இருந்து சிறைகளாய் மாறியவைகள். உலகத்திலுள்ள பழமையான கோட்டைகள் அனைத்தும் சிதைவுகளுக்கு மத்தியில் இருக்க, அதிலிருந்து கைதிகள் அணிவகுத்து கிறிஸ்து என்னும் புதிய விசுவாசத்திற்குள் கடந்துபோகின்றனர்.*

*இதுவே ஆவிக்குரிய யுத்தம்.*

*யுத்த போராயுதங்கள் எது என்பது தெளிவாயிருக்கிறது: தேவனுடைய வார்த்தையிலிருக்கும் சத்தியம்.*

*நீங்கள் ஆவிக்குரிய யுத்தம் செய்ய விரும்புகிறீர்களா?*

*சத்தியத்தை கற்றுக்கொள்ளுங்கள்.*

*பிழைகளை கையாளுவது எப்படி என்பதைப் பழகுங்கள்.*

*சத்தியத்தைக் கொண்டு பிழைகளை எப்படி எதிர்ப்பது என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்.*

*ஏன் வேதத்தோடு நாம் அதிக நேரம் செலவழிக்கிறோம்?*

*அதைக் காட்டிலும் நேர்த்தியான ஒரு ஆயுதத்தை யாரேனும் கண்டுபிடிக்க முடியுமா?*

*சத்தியம் ஓங்கும்போது, முரட்டாட்ட சிந்தை முடிவுக்கு வருகிறது. அதைத் தான் நாம் செய்கிறோம்!*

*நாம் சத்தியத்தைப் பிரசங்கிக்கிறோம்.*

*நாம் சத்தியத்தைப் போதிக்கிறோம்.*

*நாம் சத்தியத்தை எழுதுகிறோம்.*

*நாம் சத்தியத்தை பிரகடனப்படுத்துகிறோம்.*

*சத்தியத்தால் மட்டுமே அனைத்து பொய்களையும் மேற்கொள்ள முடியும்.*

*நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய் ஆவிக்குரிய யுத்தம் செய்யவேண்டுமானால், அதற்கான ஆயுதத்தை நீங்கள் கொண்டுசெல்ல மறக்கக்கூடாது. தேவனுடைய வார்த்தையை நீங்கள் நன்கு அறியவேண்டும்.*

*தேவனுடைய வார்த்தையினால் மட்டுமே பொய்யை மேற்கொள்ள முடியும். அதுவே தேவனுடைய வல்லமை.*

***1 கொரிந்தியர் 1:17-20, ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார். 18. சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. 19. அந்தப்படி ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது. 20. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?***

***1 கொரிந்தியர் 1:25, இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.***

***1 கொரிந்தியர் 2:1-5, சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. 2. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். 3.***

***அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். 4. உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, 5. என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது.***

*மக்களை கிறிஸ்தவ விசுவாசம் என்னும் வேலைக்கு அழைக்கும் திறமையான பிரசங்கங்களை பவுல் செய்ய விரும்பவில்லை. ஆனால் தேவனுடைய வார்த்தையை அவர்கள் சந்திக்க செய்து, அது அவர்களுக்குள் கிரியை செய்ய வேண்டும் என்று விரும்பினார்.*

*பெரும்பாலான மக்கள் மனிதர்களின் ஞானத்தைக் கண்டு மனமாற்றம் அடைந்திருக்கிறார்கள், அது இரட்சிப்பாகாது. தேவனை பூரணமாய் அறிகிற அறிவிற்கு விரோதமான மக்கள் தங்களுக்கென்று கட்டிவைத்திருக்கிற பலத்த கோட்டைகளை சத்தியத்தின் உதவியோடு தகர்த்தெரியப் பண்ணுவதே நேர்த்தியான இரட்சிப்பு.*

***எபிரெயர் 4:12, தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.***

*வார்த்தையே ஆயுதம்!*

***2 கொரிந்தியர் 4:5, நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.***

***2 கொரிந்தியர் 6:7, சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயதங்களைத் தரித்திருக்கிறதிலும்,***

*சத்திய வார்த்தைகளே தேவனுடைய வல்லமையை தாங்கி, நீதியின் ஆயுதங்களை நமக்கு உண்டாக்கித் தருகின்றது.*

*வேதாகமமே பலத்த கோட்டைகளை தகர்த்தெரியச் செய்து மக்களை கிறிஸ்துவுக்கு சிறையாக்கும்.*

***ஏன்?***

*ஏனென்றால் சத்தியத்தை நீங்கள் அறியும்வரை பிழையை கண்டறிய முடியாது. சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ளும் வரை நீங்கள் மனந்திரும்ப முடியாது.*

*கள்ள உபதேசக் கொள்கைகளை அழிப்பது மட்டும் பவுலின் நோக்கமன்று,*

*பலத்த கோட்டைகளை தகர்ப்பது மட்டும் பவுலின் நோக்கமன்று,*

*கிறிஸ்துவின் இரட்சிப்பின் திட்டத்தின் கீழ் மக்களைக் கொண்டுவருவதையே பவுல் விரும்பினார்.*

*சில அவநம்பிக்கைகளை தகர்த்தெரிவதாகவோ, மற்ற சிறந்த காரியங்களை மாற்றுவதாகவோ அவர் சொல்லவில்லை. மாறாக, எல்லா சிந்தனைகளையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படுத்தி சிறையாக்குவதாக அறிவிக்கிறார்.*

*கீழ்ப்படிதலே மெய்யான இரட்சிப்பின் அடையாளம்.*

***யோவான் 14:15, நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.***

*கீழ்ப்படிதலே எப்போதும் மெய்யான இரட்சிப்பிற்கான அடையாளமாயிருக்கிறது.*

*நாம் மக்களை சிறைப்படுத்தி கைதிகளாய் வைத்திருக்கிற பொய் என்ற பலத்த கோட்டைகளிலிருந்து அவர்களை விடுவித்து, இயேசுவின் செட்டையின் கீழ் அவர்களை அடைக்கலப்படுத்துகிறோம்.*

*நாம் ஆவிக்குரிய யுத்தம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

*ஆனால் பிசாசை துரத்திக்கொண்டு ஓடுவதின் மூலமாய் நீங்கள் அந்த யுத்தத்தை செய்யாமல், தேவனுடைய வார்த்தையை அறிந்து, மனிதர்கள் தங்களுக்கென்று கட்டிவைத்திருக்கிற பொய்யின் பலத்த கோட்டைகளை தகர்த்து அந்த யுத்தத்தை நீங்கள் செய்யுங்கள். அதை இரக்கத்துடன் செய்யுங்கள், ஆனால் அதே நேரத்தில் தைரியத்துடனும் செய்யுங்கள்.*

*நீங்கள் பொருமையாய் இருக்க விரும்புகிறீர்கள்,*

*நீங்கள் மென்மையாய் இருக்க விரும்புகிறீர்கள்,*

*நீங்கள் மக்கள் விளங்கிக்கொள்வதற்கு நேரம் கொடுக்க விரும்புகிறீர்கள், ஆனால் நீங்கள் இடைவிடாமல் இந்த யுத்தத்தில் பங்கேற்கவேண்டியுள்ளது. அவர்கள் வேரூன்றும்போது நீங்கள் யுத்தத்திற்கு புறப்படுகிறீர்கள்.*

*நல்ல மற்றும் உண்மையான போர்சேவகன் இரக்கமுள்ளவனாகவும் தைரியமுள்ளவனாகவும் புத்தியோடு ஞானமாய் செயல்படுகிறவனாயிருப்பான்.*

*முடிவுரை:*

*ஞானமாய் கணக்கிடுங்கள். ஒரு நல்ல போர்ச்சேவகன் எல்லாவற்றையும் கணக்கில் வைத்திருப்பதை புரிந்துகொள்வான். நேரம் மிகவும் முக்கியமானது.*

*உங்களுடைய எதிரி யார்?*

*அவனை அறிந்துகொண்டு, அவன் பெலவீனமாயிருக்கும்போது அவனை கைப்பற்றுங்கள்.*

*எதிரி கண்ணில் சரியாய் தென்படுவதற்கும் புலப்படுவதற்கும் சரியான நேரம் இருக்கிறது என்பதை அறியவேண்டும்.*

***வச. 6, உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயுமிருக்கிறோம்.***

*தாமதம் என்பது கோழைத்தனமில்லை. அவர் ஆயத்தமாயிருக்கிறார்.*

*கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய மறுப்பவர்களுக்கான நேரடியான எச்சரிப்பு இது.*

***அவர் ஏன் தாமதிக்கிறார்?***

*பவுல் திருச்சபையோடு பேசுகிறார்.*

*எப்போது திருச்சபை மொத்தமும் தங்கள் கீழ்ப்படிதலில் முழுமையடைகிறதோ அதுவரை தாமதிக்கவேண்டியுள்ளது. சுவிசேஷத்திற்கு உண்மையாய் தங்களுடைய நிலையை அனைவரும் ஸ்தாபித்துக்கொள்ளும்வரை தாமதிக்கவேண்டியுள்ளது. நீங்கள் அனைவரும் கீழ்ப்படிவதற்கு முழுமையாய் ஒப்புக்கொண்ட பின்பு, மீதமிருக்கிற கீழ்ப்படியாதவர்கள் யார் என்று கண்டுபிடித்து, அதன் பின்பு நான் செயல்பட வேண்டியிருக்கிறது.*

*உங்களை நான் மொத்தமாய் கடிந்துகொள்ள விரும்பவில்லை.*

*ஒரு இராணுவ வீரன் கண்ணில் கண்ட எல்லோரையும் சுட மாட்டான். அவனுக்கு யார் செவிகொடுக்கிறார்களோ அவர்களிடத்தில் இரக்கத்துடனும், கிருபையுடனும் தயவுடனும் செயல்படுவான். ஆனால் கீழ்ப்படியாதவர்களிடத்தில் தன் யுத்த திறமையைக் காண்பிப்பான்.*

*இந்த உலகத்தில் நடக்கும் ஆவிக்குரிய யுத்தத்தை நீங்கள் எவ்வாறு கையாளப்போகிறீர்கள்?*

*மென்மையாக, பொறுமையாக, இரக்கத்துடனும் தைரியத்துடனும் கையாள வேண்டும்.*

*இதுபோன்ற சூழ்நிலைகளை நீங்கள் சந்திக்க நேரிடலாம். ஆனால் ஆவிக்குரிய யுத்தத்தை செய்தே ஆகவேண்டும்.*

*நீங்கள் இரக்கமும் தைரியமும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.*